(2) ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திற் கண்ணாயிரு

(3) வெள்ளம் வருமுன்னே அணைகோல வேண்டும்.


11. பின்வரும் வாக்கியத்தின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான தொடரைத் தெரிவு செய்க.

....., செய்தி நாடெங்கும் பரவியது


(1) வெள்ளிடை மலை போல

(2) காட்டுத் தீ போல


(3) குடத்துள் விளக்குப் போல

12. 


இங்கு தரப்பட்டிருப்பது சில சதுரமுகிகளை இணைத்து ஆக்கப்பட்ட ஒரு வடிவமாகும். இதனை மேலிருந்து நேராகப் பார்க்கும் போது இது தோற்றும் விதத்தினைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.




(1) (2) (3)

13. 

இந்த உருவில் உள்ளவாறான ஒரு வடிவத்தைக் கோடு AB வழியே இரண்டாக மடிக்கும்போது கிடைக்கும் உரு யாது?



(1) (2) (3)

14. 

இங்கு காணப்படுவது முகம்பார்க்கும் கண்ணாடியில் தெரியும் கடிகார முகமாகும். அக்கடிகாரத்தில் காட்டப்படும் சரியான நேரம் யாது?

(1) பி.ப 8.25 (2) பி.ப 7.25 (3) பி.ப 3.35

15. மாலாவினதும் அவளின் அம்மாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 34 வருடங்கள் ஆகும். இன்னும் மூன்று வருடங்களில் அம்மாவின் வயது மாலாவின் வயதின் நான்கு மடங்காக இருக்கும். மாலாவினதும் அளின் அம்மாவினதும் தற்போதைய வயதுகள் முறையே யாவை?

(1) 7 வருடங்கள், 27 வருடங்கள்

(2) 5 வருடங்கள், 29 வருடங்கள்

(3) 4 வருடங்கள், 30 வருடங்கள்


16. 

உருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியின் சுற்றளவு $9cm$ எனின், முழு உருவத்தினதும் சுற்றளவு யாது?

(1) $12cm$

(2) $18cm$

(3) $24cm$

17. 

இந்த உருவில் உள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 10
(2) 12
(3) 14

● 18, 19 ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

18. தெற்கு : வடமேற்கு எனின், மேற்கு : .....

(1) வடகிழக்கு (2) வடக்கு (3) தென்மேற்கு

19. வங்கி : முகாமையாளர் எனின், பாடசாலை : .....

(1) மாணவர் (2) ஆசிரியர் (3) அதிபர்

20. கீழே தரப்பட்ட வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) அம்மா சமயலை முடித்து எல்லோருக்கும் உணவு பரிமாறினாள்

(2) அம்மா சமையலை முடித்து எல்லோருக்கும் உணவு பறிமாறினாள்


(3) அம்மா சமையலை முடித்து எல்லோருக்கும் உணவு பரிமாறினாள்

● 21, 22 ஆகிய வினாக்களில் தரப்பட்டவற்றில் நெருங்கிய தொடர்பு உள்ள சோடிச் சொற்களைத் தெரிவு செய்க.

21. (1) கோவா - அன்னாசி (2) அன்னாசி - கொய்யா (3) கோவா - கொய்யா

22. (1) சட்டை - தொப்பி (2) சட்டை - காற்சட்டை (3) தொப்பி - காற்சட்டை

23. பாடசாலை மைதானத்தில் காலை வேளையில் ஓட்டப்பயிற்சியில் ஈடுபடும் சிறுவனின் படம் அருகே தரப்பட்டுள்ளது. சிறுவன் எந்தத் திசையை நோக்கி ஓடுகிறான் என்பதைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்க.



(1) கிழக்கு
(2) வடக்கு
(3) தெற்கு

24.

□	⊙	⊙	⊙	14
□	□	⊙	⊡	-?-
△	⊡	⊡	△	12
12	12	10	9	


அடைப்புகளில் உள்ள ஒவ்வொரு உருவுக்கும் ஒவ்வொரு முழு எண் பெறுமானம் தரப்பட்டுள்ளது. அப்பெறுமானங்களின் கூட்டுத்தொகை நிரையாகவும் நிரலாகவும் தரப்பட்டுள்ளது. அதன்படி -?- என்ற குறியினால் காட்டப்படும் இடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

(1) 16 (2) 17 (3) 18

25. $5 \odot 5 = 5 * 4 \boxdot 2$ என்னும் கணிதத் தொடர்புடைமையில் $\odot$, $*$, $\boxdot$ என்னும் குறியீடுகளுக்காகப் பயன்படுத்தப்படுள்ள மூன்று கணிதச் செய்கைகளையும் முறையே காட்டும் விடை எது?

(1) +, −, × (2) ×, +, − (3) +, ×, ÷

- ஒன்பது பிள்ளைகள் தமக்கு விருப்பமான மூன்று வகைப் பழங்களை இந்த வரிப்படத்தின் மூலம் குறித்துக் காட்டினர். அதனை அவதானித்து 26, 27 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



26. மூன்று வகைப் பழங்களையும் விரும்பும் பிள்ளை யார்?


(1) ராமு (2) ரவி (3) சாந்தி

27. ஏதேனும் இரண்டு பழங்களை மாத்திரம் விரும்பும் பிள்ளைகளை மட்டும் குறிக்கும் விடைஎது?


(1) சாந்தி, ராமு, விசு (2) குமார், முரளி, விசு (3) தயா, ரவி, குமார்

- 28, 29 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை A குறிப்பிடும் திசை வழியே பார்க்கும் போது அது தோற்றும் விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

28.



29.



30. 110 தொடக்கம் 119 வரையுள்ள எண்களை எழுதும் போது இலக்கம் 1 ஐ எழுத வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 20 (2) 21 (3) 22

- மூன்று பிள்ளைகள் நூலகத்திற்குச் சென்ற நேரமும் அங்கிருந்து வெளியேறிய நேரமும் பற்றி தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து 31, 32 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

நாசர் - பி.ப 1.15 இற்குச் சென்று பி.ப 3.00 இற்கு வெளியேறினான்.
நிசார் - பி.ப 2.45 இற்குச் சென்று பி.ப 4.15 இற்கு வெளியேறினான்.
நாதன் - பி.ப 1.30 இற்குச் சென்று பி.ப 3.45 இற்கு வெளியேறினான்.

31. கூடுதலான நேரம் நூலகத்தில் இருந்த பிள்ளையையும் குறைந்தளவு நேரம் நூலகத்தில் இருந்த பிளையையும் முறையே காட்டும் விடை எது?

(1) நாதன், நிசார் (2) நாசர், நிசார் (3) நாதன், நாசர்

32. மூன்று பிள்ளைகளும் ஒன்றாக நூலகத்திலிருந்த நேரம் எவ்வளவு?

(1) 45 நிமிடம் (2) 30 நிமிடம் (3) 15 நிமிடம்

33. பின்வரும் எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

14 28 20 40 32 64 .....

(1) 52 (2) 56 (3) 128

34. எண்கள் எழுதப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


123, 235, 358, 5813, ...


(1) 81323 (2) 81310 (3) 81321

35. ஒரு கடிகாரத்தில் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையேயுள்ள கோணம் ஒரு செங்கோணத்தைவிடக் கூடுதலாக இருக்கும் சந்தர்ப்பம் பின்வரும் எந்நேரத்தில் காணப்படும்?


(1) மு.ப 9.30 (2) மு.ப 3.25 (3) மு.ப 11.45


36. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

 எனின்,  : .....

 (1)
 (2)
 (3)

37. சதுரவடிவ கடதாசி ஒன்றை, படத்தில் காட்டியவாறு மூன்று முறை மடித்துப் பெறப்பட்ட உரு X இன் நடுவில் ஒரு துளையிடப்பட்டுள்ளது. கடதாசியை விரித்துப் பார்க்கும் போது காணக் கிடைக்கும் உரு யாது?






(1) (2) (3)

38. கீழுள்ள இலக்கங்களின் நிரையில் ஒரு தடவை மாத்திரம் வந்துள்ள இலக்கங்களைப் பெருக்கும் போது கிடைக்கும் விடை யாது?

5	6	3	2	9	7	1	4	2	6	8	3	7	5	9	7	1

(1) 72 (2) 32 (3) 28

- பின்வரும் தொடர்புகளை விளங்கி 39, 40 ஆகிய வினாக்களுக்குரிய விடையினைத் தெரிவு செய்க.



39. □ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

(1) 20 (2) 18 (3) 16

40. ◇ + ○ − □ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

(1) 22 (2) 24 (3) 32

* * *

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம். ஏ. அபுதாஹிர்

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் **15** நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	

[பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

நாங்கள் கடற்கரைக்கு அண்மையில் அமைந்துள்ள கற்பாறையின் மேல் ஏறினோம்; தூரத்தே தெரியும் அடிவானைப் பார்த்தோம். நெருப்புக் கோளம் போலத் தோன்றியது சூரியன். அது, கடலுக்குள் மெதுவாக மூழ்கிக் கொண்டிருப்பது போலக் காட்சியளித்தது. இருள் அரக்கன் உலகை மூடிக்கொள்ள ஆயத்தமாவதற்குச் சற்று முன்னுள்ள பொழுது அது. அதன் கண்கொள்ளாக் காட்சி எங்கள் மனங்களை நிறைத்தது.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) இங்கு அரக்கனாகக் குறிப்பிடப்படுவது யாது?

: .....

(ii) கற்பாறை எங்கே இருந்தது? : .....

(iii) கடலில் மூழ்குவது போலத் தெரிந்தது எது?.

: ..... , ...

(iv) பந்தியில் இடம்பெறும் உவமானத்தை எழுதுக.

: .....

(v) 'கண்ணையும் கருத்தையும் கவரும் தோற்றம்' என்னும் கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.

: .....

(vi) 'காட்சியளித்தது' என்பதைப் பிரித்து எழுதுக.

: .....

2. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

(i) ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்

: .....

(ii) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

: .....

3. அ) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ..... (வானலாவிய / வானளாவிய) கட்டடங்கள் கொழும்பு நகரை அழகுபடுத்துகின்றன.

(ii) உள்ளூராட்சி மன்ற ..... (ஊழியர்கள் / ஊளியர்கள்) குப்பைகளை சேகரிக்க வருவர்.

ஆ) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) காற்று வீசியதால் வெப்பம்..... (குறையும் / குறைந்தது)

(ii) மீனா, தம்பியுடன் பாடசாலைக்குச் ..... (சென்றார்கள் / சென்றாள்)

4. பின்வரும் சொற்றொடர் குறிக்கும் **தனிச்சொல்லை** எழுதுக.

விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது : .....

சுட்டெண்: .....

5. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

(i) மிருகக் காட்சிச்சாலை எங்கே உள்ளது

(ii) பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன

6. பின்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடைப்பினுள்ளே அடையாளமிடுக.

(i) 'மரம்' என்பது அ.றிணை ஒருமைப் படர்க்கைப் பெயர்ச்சொல். (.....)

(ii) 'பாடுகின்றனர்' என்பது நிகழ்கால ஒருமை வினைமுற்று. (.....)

7. பின்வரும் வாக்கியத்தை எழுத்து மொழியில் எழுதுக.

எனக்குச் சாப்பாடு வேணாம் : .....

8. தடித்த எழுத்தில் இருக்கும் சொல்லின் கருத்தை எழுதுக.


(i) கும்பகர்ணன் போர்க்களம் சென்று **ஆவி** துறந்தான். : .....

(ii) தசரதன் இராமனுக்கு முடிசூட்ட **விரும்பினான்**: .....


9. வெற்றிடத்துக்குப் பொருத்தமான மரபுச் சொல்லை எழுதுக.

வண்டு இரையும் என்பது போல, பல்லி .....

10. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச்சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i) 

.....

(ii) 

.....

11. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லும் விதத்தில் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

இது என்ன? : .....

12. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

Shall we get ready? : .....

13. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

give / pencil / please / a / me : .....

14. பந்தி (B)பார (G)குறுத்துமா என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

: .....


15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

அப்பா வந்தாரா? : .....

- தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.

16. இலக்கங்களில் எழுதுக.

தொண்ணூறாயிரத்து ஏழு : .....


17. 

வட்டத்தில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத் தக்க மிகப் பெரிய எண்ணை எழுதுக.

: .....

18. எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்களை உரோமன் இலக்கங்களில் எழுதுக.

(i) எட்டு : ..... (ii) பதினாறு : .....

19. 

புள்ளிக்கோடுகளால் சமச்சீராகப் பிரிக்கப்பட்டுள்ள உருக்களைத் தெரிவுசெய்து, அவ்வுருக்களுக்குரிய ஆங்கில எழுத்துக்களை எழுதுக.

: .....

20. கட்டத்திலுள்ள எண்களைக் கொண்டு விடை எழுதுக.

191	362
	581
281	

(i) கூட்டினால் மிகப் பெரிய பெறுமானத்தைப் பெறக் கூடிய மூன்று எண்களும் எவை?

: .....


(ii) எந்த இரு எண்களின் வித்தியாசம் 81 ஆகும்?

: .....

21. தாரிக் மு.ப 8.15 மணிக்குப் பாடங்கள் படிக்கத் தொடங்கி 4 மணித்தியாலம் 50 நிமிடங்களுக்குப் பின்னர் நிறுத்தினான். அவன் பாடங்கள் படித்து முடித்த நேரம் இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.

: .....


22. ஒவ்வொன்றும் 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவுள்ள 16 சதுரங்களை இவ்வுரு கொண்டுள்ளது.



(i) அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?


: .....

(ii) இதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவின் என்ன பின்னம்? : .....

23. 

இவ்வுரு எட்டு சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அதில் இரு பகுதிகள் நிழற்றப்பட்டுள்ளன. இவ்வுருவில் $\frac{3}{4}$ ஐ நிழற்றுவதற்காக நிறந்தீட்டப்பட்ட பகுதிகளுக்கு மேலதிகமாக இன்னும் எத்தனை பகுதிகளை நிறந்தீட்ட வேண்டும்?

: .....

24. 

வட்டத்தில் உள்ள எண்களில் 6 இன் மடங்குகளைத் தெரிவு செய்து எழுதுக.


: .....

25. 620 புத்தகங்களைக் கொண்டு ஒரு பொதியில் 3 புத்தகங்கள் வீதம் இருக்குமாறு எத்தனை பொதிகளைச் செய்யலாம்?

: .....

26. பாத்திரம் ஒன்றிலிருந்த நீரில் 2 லீற்றர் 350 மில்லிலீற்றர் நீர் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் 17 லீற்றர் 800 மில்லிலீற்றர் நீர் எஞ்சியிருந்தது. பாத்திரத்தில் ஆரம்பத்திலிருந்த நீரின் கனவளவு லீற்றர், மில்லி லீற்றரில் எவ்வளவு?

: .....*l* .....*ml*

27. 


உருவின் சுற்றளவைத் தரப்பட்ட அளவீடுகளுக்கேற்ப காண்க.

: .....

28. ஒன்று ரூ. 28 பெறுமானமுள்ள 3 அப்பியாசக் கொப்பிகளை வாங்கிய மாலதி வியாபாரியிடம் ரூ. 100 தாள் ஒன்றினையும் ரூ. 14 இனையும் கொடுத்தாள். அவளுக்குக் கிடைக்க வேண்டிய மீதிப் பணம் எவ்வளவு?

: .....

29. ஓர் ஆரம்பப் பாடசாலைக்குப் பிள்ளைகள் வரும் வாகனங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் காணப்படுகின்றன.



(i) துவிச்சக்கர வண்டியில் வரும் மாணவர்களின் எண்ணிக்கை 36 ஆகும். அதனை வரைபில் வரைந்து நிரலை நிழற்றுக.

(ii) பஸ்ஸிலும் முச்சக்கர வண்டியிலும் வரும் பிள்ளைகளின் எண்ணிக்கைகளுக்கிடையே உள்ள வித்தியாசம் யாது?

: .....

● 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

30. இலங்கைக்கே உரித்தான தாவரம் **அல்லாதது,**
(1) வல்லாரை (2) எண்ணெய் (3) காட்டிலுப்பை (4) நிலவேம்பு

31. பப்பாசி இலையின் வடிவை ஒத்த இலையுள்ள தாவரம்
(1) ஈரப்பலா (2) அகத்தி (3) கத்தாப்பு (4) பலா

32. இரவில் திரியும் பறவைகள்
(1) சாக்குருவி, ஆந்தை (2) மரங்கொத்தி, செண்பகம்
(3) பருந்து, செண்பகம் (4) புறா, ஊர்க்குருவி

33. இலங்கைக்கே உரித்தான ஈருடக வாழி
(1) கோழிக்கொண்டை (2) புள்ளிக்கோட்டி
(3) மரத்தேரை (4) கொம்பு ஓணான்

34. மரக்குற்றியில் உருவம் செதுக்கப்பயன்படும் உபகரணம்
(1) வாள் (2) அரம் (3) சீவுளி (4) உளி

35. 'ஒடுக்கமான பாலம் முன்னால்' என்பதைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உருவக் குறியீடு,


(1)


(2)


(3)


(4)

36. இந்து சமயத்துக்கும், பௌத்த சமயத்துக்கும் பொதுவான காருண்யம், இரக்கம், திருப்தி, பற்றின்மை ஆகிய நான்கு பண்புகளையும் குறித்துக் காட்டத் தேசியக் கொடியில் பயன்படுத்தப்பட்டிருப்பது,
(1) நான்கு நிறங்கள் (2) நான்கு அரச இலைகள்
(3) நாற்புறமும் உள்ள மஞ்சள்நிறம் (4) வாளேந்திய சிங்கம்

37. விவசாயிகளுக்குத் தீங்கு பயக்கும் விலங்கினம்
(1) நத்தை (2) செண்பகம் (3) மண்புழு (4) தேனீ

38. இரவில் மலரும் பூக்கள்
(1) அலரி, அந்திமந்தாரை (2) பவளமல்லிகை, தாமரை
(3) ரோசா, செவ்வரத்தை (4) பவளமல்லிகை, கடுபுல்

39. உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவுகள்,
(1) பயறு, பருப்பு (2) வல்லாரை, பசளி
(3) சோறு, பலாக்காய் (4) வெண்டி, கரட்

40. நீரில் இட்டவுடன் நீரை ஊதா நிறமாக மாற்றுவது,
(1) சர்க்கரை (2) தேயிலை (3) வினாகிரி (4) கொண்டிஸ்தூள்


41. நரி, குரங்கு ஆகியன கடிப்பதன் மூலம் ஏற்படத்தக்க ஒரு நோய்
(1) விசர்நாய்க்கடிநோய் (நீர்வெறுப்பு) (2) யானைக்கால் நோய்
(3) கழிச்சல் நோய் (4) கொள்ளை நோய்

42. மண்ணரிப்பினால் ஏற்படத்தக்க விளைவு **அல்லாதது**,
(1) பயிர்கள் சேதமடைதல் (2) மண்வளம் அதிகரித்தல்
(3) நிலம் பண்படுத்தல் சிரமமாதல் (4) ஆறுகளின் அடியில் மணல் நிரம்புதல்

43. **வளமற்ற** மண்ணுக்கு உரிய பண்பு எது?
(1) ஈரலிப்பானதும் கறுப்பு நிறமானதுமான மண்
(2) மண்புழுக்கள் காணப்படக் கூடிய மண்
(3) தாவர விலங்குக்கழிவுகளைக் கொண்ட மண்
(4) தனியாக மணலை மாத்திரம் கொண்ட மண்

44 பின்வரும் செயற்பாடுகளில் சூழலுக்குத் தீங்கு விளைவிக்காதது எது?
(1) வயலுக்குக் கிருமிநாசினி தெளித்தல்
(2) குப்பை கூழங்களைக் கூட்டெருவுக்குப் பயன்படுத்தல்
(3) இரவில் வீட்டினுள் நுளம்புச் சுருள் பயன்படுத்தல்
(4) பயன்படுத்தப்பட்ட பொலிதீன்களை எரித்தல்

45. எது பாதுகாப்பான நடவடிக்கையாகும்?
(1) செருப்பு அணியாமல் மின் ஆளிகளைத் தொடுதல்
(2) இடி மின்னல் வேளைகளில் திறந்தவெளிகளில் நிற்றல்
(3) ஈரக்கைகளுடன் மின்சாரத்துடன் தொடுக்கப்பட்ட உபகரணங்களைத் தொடுதல்
(4) இடிமின்னல் வேளைகளில் கைத்தொலைபேசியைத் துண்டித்து வைத்தல்.

46. 

இந்த உடுக்கோலத்திற்கு வழங்கப்படும் பெயர்,
(1) கலப்பை (2) பெருநாய்
(3) தென்சிலுவை (4) வேட்டைக்காரன்

47. மின்காந்தம் ஒன்றை அமைக்க **அவசியமற்ற** பொருள்,
(1) மின்குமிழ் (2) மின்கலம் (3) கொயில்கம்பி (4) இரும்பாணி

48. வானவில்லில் **காணப்படாத** நிறம்,
(1) மஞ்சள் (2) செம்மஞ்சள் (3) கபிலம் (4) ஊதா

49. இல்லத்திற்குக் குழாய் நீர் வசதியைப் பெற நாம் செல்ல வேண்டிய இடம்,
(1) நீர்ப்பாசனத் திணைக்களம் (2) பிரதேசசெயலகம்
(3) மாவட்டச் செயலகம் (4) நீர்வழங்கல் வடிகால் சபை

50. தென்மாகாணத்தில் அமைந்துள்ள நகரம் **அல்லாதது**
(1) காலி (2) அம்பாந்தோட்டை (3) களுத்துறை (4) மாத்தறை

51. வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் காய்,
(1) பயற்றை (2) அவரை (3) வெண்டி (4) புடோல்

52. விலங்குகளால் பரவிப் பெருகும் வித்துக்கள் **மாத்திரம்** அடங்கிய விடை
(1) எருக்கலை, சீதேவியார்செங்கழுநீர், இறப்பர்
(2) மரமுந்திரிகை, அச்சி, வேங்கை
(3) கௌபி, பயறு, எருக்கலை
(4) துத்திரி, நாயுருவி, புலிநகம்

53. இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் நாம் அதிக கவனம் செலுத்தக் **கூடாத**அம்சம்,
(1) பதற்றத்தைத் தவிர்த்தல் (2) சொத்துக்கள், ஆதனங்களைக் காப்பாற்றுதல்
(3) விரைந்து செயற்படல் (4) உயிர்களைக் காப்பாற்றுதல்

54. தேசியக் கொடியைச் சுற்றிவர உள்ள மஞ்சள் நிறக்கீற்று குறிப்பது,
(1) தேசிய ஒற்றுமையை (2) தமிழ் மக்களை
(3) முஸ்லிம்களை (4) சிங்கள மக்களை

55. காலாவதியான தகரத்தில் அடைத்த மீனை உண்பதால் ஏற்படத்தக்க விளைவு
(1) சொறிவு (2) வயிற்றுவலி, வாந்தி
(3) உதடுவீக்கம் (4) உடல் தடித்தல்

56. கையில் ஒட்டிய பலாக்காய்ப் பாலை எளிதாக அகற்றப் பயன்படுத்தத் தக்க பொருள்,
(1) மண்ணெண்ணெய் (2) தேங்காயெண்ணெய்
(3) சவர்க்காரம் (4) குளிர்நீர்

57. சுவருக்குப் பூசப்படும் வர்ணப்பூச்சுக்களை நன்றாகக் கரைத்துப் பூச்சுக்கு உகந்த கலவையாக மாற்றுவதற்கு மிக உகந்த பொருள்,
(1) குளிரேற்றியநீர் (2) பெற்றோல் (3) நீர் (4) மண்ணெண்ணெய்

58. அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் கலக்கக் **கூடாத பொருள்,**
(1) இஞ்சி (2) கொறுக்காய் (3) கறுவா (4) வெள்ளைப்பூண்டு

59. இலங்கைக்கு மேற்கே காணப்படுவது,
(1) தாய்லாந்து (2) மலேசியா (3) ஆபிரிக்க நாடுகள் (4) அவுஸ்திரேலியா

60. வாசிப்பதனால் எமது அறிவு வளர்கிறது. அவ்வாறு வாசித்து அறிவை வளர்க்கத்தக்க ஓர் இடமாக விளங்கும் "எங்கள் பாடசாலை நூலகம்" என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

- .....
.....
- .....
.....
- .....
.....

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST Q FIRST

முன்னோடி வினாத்தாள் 4

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

வினாத்தாள் - I

45 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்



பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	

[பக். 2 ஐப் பார்க்க

- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள இரண்டு உருக்களுடனும் பொருந்துகின்ற உருவைத் தெரிவு செய்க.





1.



(1) (2) (3)




2.

(1) (2) (3)



- 3, 4 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள மூன்று உருக்களில் ஒன்று ஏனைய இரு உருக்களில் இருந்தும் வேறுபடுகிறது. வேறுபடும் உருவைத் தெரிவுசெய்க.

3.

(1) (2) (3)

4.


(1) (2) (3)

5. வெள்ளம் ஏற்படும் பொழுது வியாபாரிகள் பொருள்களின் விலைகளை உயர்த்துகின்றனர். வியாபாரிகளின் இச்செயல் எதற்கு ஒப்பாகும்?

(1) எருமை வாங்குமுன் நெய் விலை பேசாதே என்பதற்கு.

(2) எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம் என்பதற்கு.

(3) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளல் என்பதற்கு.

6. 'ஆபத்துக்குப் பாவமில்லை' என்னும் பழமொழியின் கருத்து,

(1) பசு முதலிய விலங்குகளுக்குப் பாவம் உண்டாவதில்லை.

(2) நெருக்கடியான வேளையில் விலக்கான காரியத்தைச் செய்வதும் குற்றமாகாது.

(3) ஆபத்துக் காலத்தில் என்ன செய்தாலும் ஒருவரைப் பாவம் வந்து அடையாது.

சுட்டெண்: .....

7. பிள்ளைகள் மூத்தோருக்கு மாரியாதை செய்யப் பழகுதல் வேண்டும். இதற்குரிய காரணம்.

(1) மூத்தோர் நோயினால் வருந்துவதனால்.

(2) மூத்தோரினால் பிள்ளைகளுக்குத் தண்டனை வழங்க முடியுமாகையால்.


(3) மூத்தோர் பிள்ளைகளை விட அனுபவம் நிறைந்தவராகையால்.

8. ஓட்டப் போட்டியில் நான் முதலிடம் பெறுவேன் எனக் கண்ணன் கூறுகின்றான். அவன் இவ்வாறு கூறுவது,

(1) போட்டியில் எவரும் இலகுவாக வெற்றி பெறலாம் என்பதனாலாகும்.


(2) அவன் தினமும் ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டதனாலாகும்.


(3) கண்ணன் முதலிடம் பெற வேண்டும் என அவனது பெற்றோர் விரும்புவதனாலாகும்.

9.  உருவில் உள்ள முக்கோணிகளினதும் சதுரங்களினதும் எண்ணிக்கைகள் முறையே,


(1) 4, 5 (2) 2, 4 (3) 5, 5

10. தரப்பட்டுள்ள அட்டைத்தாள் பெட்டியை விரிக்கும் போது தோற்றும் விதத்தினைத் தெரிவு செய்க.






(1)



(2)



(3)

11. முகம்பார்க்கும் கண்ணாடிக்கு முன்னால் பிடிக்கும் போது மாற்றமின்றித் தெரியக் கூடிய எழுத்துக்களைக் கொண்ட விடை

(1) VUXAW (2) WXYZV (3) YUASW

● 12, 13 ஆகிய வினாக்களில் மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

12. (1) எதையும் செய்யலாம் என்று பிறகு தள்ளிப்போடாதே.

(2) எதையும் பிறகு செய்யலாம் என்று தள்ளிப் போடாதே.


(3) எதையும் பிறகு தள்ளிச் செய்யலாம் என்று போடாதே.

13. (1) வயது சென்ற பழக்கத்தை இளமையிற் பழகிய காலத்திலும் திருத்த முடியாது.


(2) வயது சென்ற காலத்திலும் பழகிய பழக்கத்தை இளமையிற் திருத்த முடியாது.

(3) இளமையிற் பழகிய பழக்கத்தை வயது சென்ற காலத்திலும் திருத்த முடியாது.

● 14, 15 ஆகிய வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய விடையைத் தெரிவுசெய்க.

14. 

(1) (2) (3)

15. 

(1) (2) (3)

16. ○□●□ = △○● ஆகும். இதன்படி, கீழே தரப்பட்ட எத்தொடர்பு சரியானது?

△□ = ○ (1) ○□ = △ (2) □□ = △ (3)

17. இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இருகணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.

9 □ 8 □ 13 = 85

(1) +, × (2) −, × (3) ×, +

18. எனது மனைவியின் சகோதரனின் தந்தைக்கும் எனது மகனுக்கும் இடையேயுள்ள உறவுமுறை எது?

(1) பெரிய தந்தையும் மகனும்

(2) மாமாவும் மருமகனும்

(3) பாட்டனும் பேரனும்

19. குறிப்பிட்ட ஒரு மாதத்தின் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனின், அம்மாதத்தின் இரண்டாவதாக வரும் திங்கட் கிழமை எத்தனையாம் திகதியாகும்?

(1) 10 (2) 12 (3) 13

20. ரூ. 12 பெறுமதியான முத்திரைகளில் ஒரு குறித்த எண்ணிக்கையையும் ரூ. 25 பெறுமதியான முத்திரைகளில் ஒரு குறித்த எண்ணிக்கையையும் வாங்குவதற்கு மீனா செலவிட்ட பணம் ரூ. 135 ஆகும். மீனா வாங்கிய ரூ. 25 பெறுமதியான முத்திரைகள் எத்தனை?

(1) 2 (2) 3 (3) 4


21. ஒரு குழுவில் உள்ள மாணவர்கள் ஒவ்வொருவரும் அக்குழுவில் இடம்பெறும் ஏனைய ஆறு மாணவர்களுடனும் கைகுலுக்கிக் கொண்டனர். மொத்தமாக எத்தனை கைகுலுக்கல்கள் இடம் பெற்றன?


(1) 15 (2) 21 (3) 30

● 22, 23 ஆகிய வினாக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

22. உணவுக்குப் பசி எனின், மருந்துக்கு .....

(1) வைத்தியசாலை (2) வைத்தியர் (3) நோய்

23.  எனின், → .....

(1) (2) (3)

24. ஆங்கிலச் சொற்கள் மூன்றிலும் உள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளதை அவதானியுங்கள்.

MEAN	HAVE	WIND
7241	9432	8016

இதற்கமைய, LAND என்னும் சொல்லுக்குச் சமனான இலக்கங்களைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) 8416 (2) 7316 (3) 5416

25. சமதூர இடைவெளிகளில் நடப்பட்டிருந்த ஐந்து மின்கம்பங்களுக்கிடையேயான மொத்தத் தூரம் 80 மீற்றர் ஆகும். இரண்டு மின்கம்பங்களுக்கிடையே உள்ள தூரம் யாது?

(1) 16 மீற்றர் (2) 18 மீற்றர் (3) 20 மீற்றர்

26. கீழுள்ள நிகழ்வுகளின் சரியான ஒழுங்குவரிசையைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

A - முகம் கழுவுதல்
B - உணவு உண்ணுதல்
C - நித்திரை விட்டெழுதல்
D - வீட்டிலிருந்து பாடசாலைக்குப் புறப்படுதல்
E - உடையணிதல்

(1) CAEBD (2) CBEAD (3) ABDEC

27. பிரியாவிடம் உள்ள பணம் நதியாவிடம் உள்ள பணத்தின் மூன்று மடங்காகும். நதியாவிற்கு மேலும் ரூ. 4 கிடைத்த போது இருவரிடமும் உள்ள பணமும் சமனாக அமைந்தன. இப்போது, பிரியாவிடமும் நதியாவிடமும் உள்ள பணத்தின் மொத்தம் எவ்வளவு?

(1) ரூ. 32 (2) ரூ. 12 (3) ரூ. 8

● 28, 29 ஆகிய வினாக்களில் முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களைத் தெரிவுசெய்க.

28. காற்று மிக ..... வீசும் போது, சிறுவர்கள் பட்டங்களைப் ..... விட்டனர்.

(1) சடுதியாக - பறக்க

(2) அவசரமாக - பார்க்க

(3) வேகமாக - பறக்க




29. தாமரைப் பூக்களால் நிரம்பியிருந்த ..... மிக ..... க் காட்சியளித்தது.

(1) கடல் - ஆழமாக

(2) மலை - அழகாக

(3) குளம் - அழகாக

● 1 தொடக்கம் 6 வரையுள்ள இலக்கங்களைக் காட்டும் வகையில் குற்றுக்கள் இடப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் சில முகங்கள் பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ளன. இவற்றை அவதானித்து 30, 31 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

30. இரண்டு குற்றுக்களை உடைய பக்கத்திற்கு எதிரான பக்கத்தில் காணப்படும் குற்றுக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(1) 5 (2) 4 (3) 1

31. ஒரு குற்று உடைய பக்கத்திற்கு எதிரான பக்கத்தில் காணப்படும் குற்றுக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(1) 4 (2) 3 (3) 6

32. 500g சீனியும் 250g தேயிலையும் வாங்க ரூ. 150 தேவை 1kg 500g சீனியும் 750g தேயிலையும் வாங்க எவ்வளவு தேவை?

(1) ரூ. 300 (2) ரூ. 450 (3) ரூ. 600

33. கமல் தனது பத்தாவது பிறந்தநாளை இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொண்டாடினான். அப்போது லலிதாவின் வயது 4 வருடங்கள் ஆகும். இதன்படி, கூறக்கூடிய சரியான கூற்று எது?

(1) இப்போது கமலின் வயது லலிதாவின் வயதின் இருமடங்காகும்.

(2) இப்போது லலிதாவின் வயது கமலின் வயதின் இருமடங்காகும்.

(3) இன்னும் ஐந்து வருடங்களில் லலிதாவின் வயது 10 வருடங்கள் ஆகும்.

● 34, 35 ஆகிய வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்க.

34. மரக்கிளையை வெட்டும் செயற்பாட்டினைக் காட்டும் உருக்களில் பிழையானது எது?



(1)




(2)




(3)


35. கொடி படர்ந்து செல்லும் முறைகளைக் காட்டும் உருக்களில் பிழையானது எது?



(1)



(2)



(3)

● தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு 36, 37 ஆகிய வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

சின்னஞ் சிறிய பிள்ளைகளே
சிறப்பாய் உடலில் நலம் பெறவே
எண்ணம் போல விளையாடி
உழைக்க வேண்டும் சுறுசுறுப்பாய்

36. இப்பாடல் யாரை விளித்துப் பாடப்படுகிறது?

(1) சுறுசுறுப்பாய் உழைப்பவர்களை விளித்து

(2) விருப்பம் போல விளையாடுபவர்களை விளித்து

(3) சிறு பிள்ளைகளை விளித்து

37. சுறுசுறுப்பாய் உழைப்பதனால்,


(1) தேக சுகம் பெறலாம்.

(2) விருப்பம் போல விளையாடலாம்.

(3) 'சிறந்த சிறுவர்கள்' என்று பெயர் பெறலாம்.


- எண்கள் எழுதப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப 38, 39 ஆகிய வினாக்களின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

38.



(1) 4 (2) 3 (3) 2

39.



(1) 4 (2) 5 (3) 6

40. ஒரு தவணைப் பரீட்சையில்,

வரதன், சீலனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளான்.

சீலன், பாலனிலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளான்.

பாலன், வரதனிலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளான்.

கூடுதலான புள்ளிகளையும் குறைந்த புள்ளிகளையும் பெற்ற இருவரும் முறையே.

(1) பாலன். சீலன்

(2) சீலன், பாலன்

(3) பாலன், வரதன்

* * *

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

முன்னோடி வினாத்தாள் 4

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் **15** நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோட்டினை மாத்திரம் இடுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	

[பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

நீர் என்பது உயிரின் ஆதாரமாகும். அது இயற்கையின் கொடையாகும். நீர் இல்லை எனில், உணவு உற்பத்தி இருக்காது. மண்ணும் காற்றும் வறண்டு போய்விடும். மனித வளம் மற்றும் எல்லா இயற்கை வளங்களுக்கும் தாய் வளம் நீராகும். நீர் பல வழிகளிலும் மனிதனுக்குப் பயன்படுகிறது. ஆயினும் தூயநீரின் வளம் உலகில் மிக மோசமாகக் குறைந்து கொண்டு செல்வது அவதானிக்கப்பட்டு வருகிறது.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) நீர் எதன் ஆதாரம் என்பதையும் அது, எதன் கொடை என்பதையும் எழுதுக.

(1) எதன் ஆதாரம்? : .....

(2) எதன் கொடை? : .....

(ii) நீர் இல்லாது போனால் வறண்டு விடுவன எவை?

: .....

(iii) நீர் முதலான இயற்கை வளங்கள் தவிர பந்தியில் குறிப்பிடப்படும் இன்னொரு வளம் எது?

: .....

(iv) 'ஈகை' என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

: .....

(v) பின்வரும் கூற்றுக்களில் பந்தியில் **குறிப்பிடப்படாத** கருத்து இடம்பெறும் கூற்றைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) நீரானது வளங்கள் அனைத்தினதும் தாயாகும்.

(2) நீர் வளம் தூய்மையிழக்க மனித செயற்பாடுகளே காரணங்களாகும்.

(3) நீரின்றேல் உணவு உற்பத்தி இடம்பெறாது.

2. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ஏகலைவன் ..... (குருதட்சணையாக / குருதட்ச்சனையாக)த் தன் கட்டைப் பெருவிரலை வெட்டிக் கொடுத்தான்.

(ii) பாபு ..... (சமையோசித / சமயோசித) புத்தியுடன் நடந்து கொள்பவன்.

3. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) பூசிமெழுகுதல் : .....

(ii) கண்ணாயிருத்தல் : .....

4. பின்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடைப்பினுள்ளே அடையாளமிடுக.

(i) மரத்தின் ஒவ்வொரு கிளையிலும் பழங்கள் காணப்பட்டன. (.....)

(ii) மாணவர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்தனர். (.....)

(iii) வீட்டுக்கூரை ஓடுகளால் வேயப்பட்டிருந்தன. (.....)

சுட்டெண்: .....

5. கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

உடலின் உறுதி உடையவரே

.....;

இடமும் பொருளும் நோயாளிக்கு

இனிய வாழ்வு தந்திடுமோ?

6. பின்வரும் வாக்கியத்தில் உள்ள **செயப்படுபொருளை** எழுதுக.

உழவன் நெல் விதைத்தான் : .....

7. (i) 'விழுந்தன' என்பதன் **நிகழ்காலச்** சொல்லை எழுதுக. : .....

(ii) 'எழுதுவேன்' என்பதன் **இறந்தகாலச்** சொல்லை எழுதுக. : .....

8. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க.

ஒரு பானைச் சோற்றுக்கு .....

9. பின்வரும் தொடர் குறிக்கும் **தனிச்சொல்லை** எழுதுக.

சிலை செய்பவன் : .....

10. பின்வரும் வாக்கியத்தை வினா வாக்கியமாக மாற்றி எழுதுக.

அது தானாக இயங்காது : .....

11. மாதம், கதிரை, வானம், இரவு ஆகியவற்றில் இடப்பெயர்ச் சொல் எது?

: .....

12. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக் களிலேயே எழுதுக.

(i) முகம் : ..... (ii) மயில் : .....

13. கருத்தினைத் தமிழில் எழுதுக.

(i) Happy new year : .....

(ii) Please be silent : .....

14. பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) sing / we / a / shall / song? : .....

(ii) do / like? / what / you : .....

15. (i) 'சிஷ்யயா' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

: .....

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

நான் குளிக்கட்டுமா? : .....

- தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.

16. எழுத்தில் தரப்பட்ட எண்ணுக்கு முன்னாலும் பின்னாலும் வரும் எண்களை இலக்கங்களில் எழுதுக.

..... முப்பத்தாறாயிரம் .....

17. தரப்பட்டுள்ள எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் எழுதுக.

86, 77, 68, ..., ...


18.

	199	
575		406
	294	

இப்பெட்டியினுள் உள்ள எண்களுள் 7 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண்கள் இரண்டும் எவை?

: .....

19. பின்வரும் உருவில் உள்ள ஒவ்வொரு சிறிய சதுரத்தினதும் சுற்றளவு $4cm$ ஆகும்.



(i) இவ்வுருவில் **நிழற்றப்படாத** பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவின் என்ன பின்னமாகும்?


: .....

(ii) இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள வடிவத்தின் சுற்றளவு எத்தனை சென்றிமீற்றர்?

: .....

20. பின்வரும் நேரத்தைக் கடிகார முகத்தில் வரைந்து காட்டுக.

ஆறு கழிந்து இருபது நிமிடங்கள்



21. மூட்டை ஒன்றில் 15kg 300g நிறையுள்ள சீனி இருந்தது. அதில் 8kg 800g நிறை சீனி விற்பனை செய்யப்பட்டது.

(i) மூட்டையில் எஞ்சியுள்ள சீனியின் நிறை யாது? : ..... kg ..... g

(ii) மூட்டையில் எஞ்சியிருந்த சீனியிலிருந்து எத்தனை 250g சீனிப் பைக்கற்றுக்களைத் தயாரிக்கலாம்?

: .....

22. 25 பூக்கள் வீதம் உள்ள நான்கு பூக்குவியல்களும் 42 பூக்கள் வீதம் உள்ள மூன்று பூக்குவியல்களும் இருந்தன. அந்த ஏழு குவியல்களிலும் உள்ள பூக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

23. வெற்றுக் கட்டத்தில் வரவேண்டிய எண்ணை எழுதுக.

$\frac{1}{2} = \frac{\square}{10}$

24. புத்தகக் கண்காட்சி ஒன்றைப் பார்வையிடுவதற்காக முதலாம் நாள் 945 பார்வையாளர்களும் இரண்டாம் நாள் 1261 பார்வையாளர்களும் மூன்றாம் நாள் 2300 பார்வையாளர்களும் வருகை தந்தனர்.

(i) முதலாம் நாளும் இரண்டாம் நாளும் வருகை தந்த பார்வையாளர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

(ii) முதலாம் நாளும் இரண்டாம் நாளும் வருகை தந்த பார்வையாளர்களின் மொத்த எண்ணிக்கையைப் பார்க்கிலும் மூன்றாம் நாள் வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை எத்தனையால் கூடியது?

: .....


25. பாடசாலைப் பரிசளிப்பு விழா 3 மணித்தியாலம் 30 நிமிடங்கள் வரை இடம்பெற்று பிற்பகல் 2.00 இற்கு முடிவடைந்தது.

(i) பரிசளிப்பு விழா முடிவடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

: .....

(ii) பரிசளிப்பு விழா ஆரம்பித்த நேரம் யாது?

: முற்பகல் .....


26. 

இந்தத் தளவடிவங்கள் யாவற்றையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க

(i) திண்மம் யாது? : .....

(ii) அத்திண்மத்திற்கு எத்தனை விளிம்புகள் (ஓரங்கள்) உள்ளன?

: .....

27. 

இந்த எண் சட்டத்தில்,

(i) வகைகுறிக்கப்படும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

: .....

(ii) இரண்டாயிரத்து நூற்று அறுபது என்னும் எண்ணை வகை குறித்துக் காட்ட எண் சட்டத்தின் கம்பிகளில் இடுவதற்கு இன்னும் எத்தனை மணிகள் தேவை?

: .....

28. பின்வரும் சிட்டையைப் பூர்த்தி செய்க.

பொருள்	அளவு	ஒன்றின் விலை		விலை	
		ரூ.	ச.	ரூ.	ச.
பென்சில்	4	8	00	32	00
அப்பியாசப் புத்தகம்	(i)	48	00	96	00
பேனை	2	(ii)	.....	29	00
மொத்தம்				(iii)	.....

29. ஹரியின் வயது 9 ஆண்டுகளும் 11 மாதங்களும் பாவுவின் வயது 11 ஆண்டுகளும் 4 மாதங்களும் ஆகும். ஹரியை விட, பாபு எவ்வளவ காலம் மூத்தவன் ஆவான்.

..... ஆண்டு ..... மாதம்

● 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

30. ஆவணி மாதத்தில் பூக்கக் கூடிய தாவரங்கள்,
(1) கொன்றை, இலுப்பை (2) மா, வேம்பு
(3) பாலை, வீரை (4) வாகை, விளா

31. ஒளடத பானம் தயாரிக்கப் பயன்படும் பூக்கள்
(1) முருங்கை, மா (2) ஆவரசு, வில்வம்
(3) கறிவேப்பிலை, செவ்வரத்தை (4) அகத்தி, சாத்தாவாரி

32. சமுத்திரங்காய், குறிஞ்சா, ஆடையொட்டி ஆகியன பரம்பலடையும் விதங்கள் முறையே,
(1) நீரினால், விலங்குகளினால், வெடிப்பதனால்
(2) வெடிப்பதனால், விலங்குகளினால், காற்றினால்
(3) காற்றினால், விலங்குகளினால், நீரினால்
(4) நீரினால், காற்றினால், விலங்குகளினால்

33. மண்புழுவினால் சூழலுக்குக் கிடைக்கும் நன்மை
(1) வயல்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை அழித்தல்
(2) மண்ணை வளப்படுத்தல்
(3) சூழலுக்கு அழகூட்டல்
(4) சூழலைச் சுத்தப்படுத்துதல்

34. இலங்கைக்கே உரித்தான பிராணி **அல்லாதது**,
(1) கொம்பு ஓணான் (2) மர அணில் (3) மழைக்குருவி (4) மரநாய்

35. பிராணிகளின் மாதிரி உருக்களை ஆக்கப் பயன்படும் கடதாசி மடிப்பு முறைக்கு வழங்கும் பெயர்,
(1) ஸ்ரென்சில் ஆக்கம் (2) கொலாஜ் (3) அல்பனா (4) ஒரிகாமி


36. மிகப் பெரிய கோள்
(1) செவ்வாய் (2) வியாழன் (3) சுக்கிரன் (4) புதன்

37. தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்படும் அச்சு ஊடகம் **அல்லாதது**
(1) கட்டுரைகள் (2) பத்திரிகைகள் (3) துண்டுப்பிரசுரங்கள் (4) மின்னஞ்சல்

38. ஈக்களின் மூலம் பரவும் நோய்,
(1) கழிச்சல் (2) நீர்வெறுப்பு (3) மலேரியா (4) பிளேக்

39. இலங்கைத் தேசிய இலச்சினையில் காணப்படுவது,
(1) அரச இலை (2) சந்திரவட்டக்கல் (3) பூவிதழ்கள் (4) பச்சை நிறக் கீலம்

40. கிழங்குகளை நடுவதன் மூலம் கன்றுகளைப் பெறக்கூடிய தாவரம்,
(1) இராசவள்ளி (2) மரவள்ளி (3) கரட் (4) வத்தாளை

41. 

இப்பாத்திரத்தில் ஊற்றப்பட்டுள்ள A, B ஆகிய திரவங்கள் இரண்டும் முறையே எவை?
(1) நீர், தேங்காயெண்ணெய் (2) நீர், வினாகிரி
(3) மண்ணெண்ணெய், நீர் (4) நீலக்கரைசல், நீர்

42. இரண்டு பனிக்கட்டிகளை ஒன்றோடு ஒன்றைச் சேர்த்து, சிறிது நேரம் பிடித்துக் கொண்டிருந்தால் அவை இரண்டும்,
(1) ஒட்டிக் கொள்ளும் (2) கூடாகும்
(3) உடைந்து சிதறும் (4) முழுமையாகக் கரைந்துவிடும்

43. பின்வரும் விளையாட்டுக்களில் குறைந்த வீரர்கள் பங்கு கொள்ளக் கூடிய விளையாட்டு,
(1) உதைப்பந்து (2) கரப்பந்து (3) கிரிக்கட் (4) மேசைப்பந்து

44. மேசன் பயன்படுத்தும் உபகரணம்
(1) வரைகம்பு (2) வனைதற்சக்கரம் (3) அரம் (4) தூக்குக்குண்டு

45. இரவில் மலரும் பூ **அல்லாதது**
(1) குவளை (2) அலரி (3) கடுபுல் (4) பவளமல்லிகை

46. உடலை நோயிலிருந்து பாதுகாக்கும் போசாக்கு மிகுந்த உணவு
(1) பலாக்காய் (2) வல்லாரை (3) பருப்பு (4) சீனி

47. பொதுப் போக்குவரத்து வாகனங்களில் விஷேடமாக ஆசனம் **ஒதுக்கப்படாதவர்கள்**,
(1) பிள்ளைகள் (2) வலது குறைந்தோர் (3) கர்ப்பிணித்தாய்மார் (4) மதகுருமார்

48. பொதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருள் ஒன்றின் மேலுறையில், அப்பொருள் அங்கீகரிக்கப்பட்ட தரமான பண்டம் என்பதைக் காட்டும் அடையாளமாக அச்சிடப்பட்டிருப்பது,
(1) உற்பத்தித் திகதி (2) பொருளின் அளவும் அமைப்பும்
(3) SLS அல்லது ISO முத்திரை (4) பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்

49. வீட்டுக்கு வரும், தீங்கு விளைவிக்கத்தக்க பிராணிகள் பெருகுவதைத் தவிர்ப்பதற்காக செய்யத் தக்க நடவடிக்கை **அல்லாதது**,
(1) வீட்டைத் தூசு தட்டித் துப்புரவு செய்தல்
(2) சுவர்களிலும் தரையிலும் துவாரங்களை இடுதல்
(3) கட்டில் விரிப்பைத் தினமும் வெய்யிலில் உலர்த்துதல்
(4) தேவையற்ற இடங்களில் நீர் ஒன்று சேர்வதைத் தவிர்த்தல்

50. காட்டுக் கோழி பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையானது,
(1) உடல் முழுவதும் சிவப்பு, நீலம், மஞ்சள், ஊதா நிற இறகுகள் காணப்படும்.
(2) பெரும்பாலும் எதிரியிடம் இருந்து பாதுகாப்புப் பெற மாத்திரமே பறக்கும்.
(3) தாவர உணவுகளை மாத்திரமே உண்ணும்.
(4) இரவில் மரக்கிளைகளில் பாதுகாப்பாகத் தங்கும்.

51. தேசிய கீதம் பாடி முடித்தவுடன் நாம் செய்ய வேண்டியது,
(1) இரு கைகளையும் உயர்த்துதல் (2) துள்ளியபடி வேகமாக ஓடுதல்
(3) தலையைத் தாழ்த்தி மரியாதை செய்தல் (4) நின்ற இடத்தில் நின்று துள்ளுதல்

52. ஒற்றுமையாகச் செயற்பட்டு பாரமான உணவுகளைக்கூட காவிச்செல்லும் விலங்கினத்திற்கு உதாரணம்
(1) கரப்பான் (2) சிலந்தி (3) எறும்பு (4) தும்பி

53. பற்றையாக வளரும் தாவரங்கள்
(1) வேம்பு, மா (2) செவ்வந்தி, வல்லாரை (3) வாழை, இஞ்சி (4) கொய்யா, நாவல்

54. நீராவியைப் பயன்படுத்திச் சமைக்கப்படும் உணவு,
(1) வத்தாளை (2) பலா (3) இடியப்பம் (4) தோசை

55. வீதியில் உள்ள மின்சைகைப் பலகையில் பச்சைநிறம் ஒளிர்வதால் குறிப்பிடப்படுவது யாது?
(1) வாகனத்தைச் செலுத்துக. (2) வாகனத்தை நிறுத்துக.
(3) வாகனத்தை வலப்புறம் செலுத்துக. (4) வாகனத்தைச் செலுத்தத் தயாராகுக.

56. நீரை உறிஞ்சக் கூடிய பொருள்,
(1) சீனி (2) பிளாஸ்ரிக் கரண்டி (3) உலர்ந்த செங்கல் (4) உப்பு

57. மின் காந்தம் ஒன்றை அமைக்கத் தேவையான பொருட்தொகுதி,
(1) இரும்பாணி, செப்புக்கம்பி, மின்குமிழ், உலர்மின்கலம்
(2) உலர் மின்கலம், செப்புக்கம்பி, இரும்பாணி, குண்டூசி
(3) உலர் மின்கலம், காந்தக்கோல், மின்குமிழ், செப்புக்கம்பி
(4) காந்தக் கோல், செப்புக்கம்பி, குண்டூசி, இரும்பாணி

58. பூரணை தினத்திற்கு ஒரு வாரத்திற்குப் பின்னர் சந்திரன் தோன்றும் விதம்,


(1)


(2)


(3)


(4)

59. பயணத்திற்காகப் பாதையைப் பயன்படுத்தும் போது நாம் செய்யக் கூடாதது,
(1) சனசந்தடியற்ற இடங்களில் பயணஞ் செய்யும் போது எச்சரிக்கையாக இருத்தல்.
(2) கூட்டமாகச் சேர்ந்து உரையாடியபடி பயணித்தல்
(3) நடந்து செல்கையில் பாதையின் வலது புறத்தைப் பயன்படுத்துதல்.
(4) பாதையைப் பரிசீலிக்காது பாதைக்கு ஓடிச் செல்வதைத் தவிர்த்தல்.

60. நாம் தாய் நாட்டை நேசிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் அவ்வாறு நேசிக்கும் ஒரு பிள்ளை நாட்டுக்காக ஆற்ற வேண்டிய நல்ல கருமங்கள் பற்றியும் ஆசிரியர் எமக்கு நிறையவே எடுத்துக் கூறிஇருக்கிறார்.
'ஒரு பாடசாலை மாணவன் என்ற வகையில் நாட்டுக்காக நான் ஆற்றிவரும் கடமைகளும் பொறுப்புக்களும்' என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

- .....
  .....
- .....
  .....
- .....
  .....

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

முன்னோடி வினாத்தாள் 5

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2019

வினாத்தாள் - I

45 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்து கின்றேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	

[பக். 2 ஐப் பார்க்க

● 1, 2 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களில் இருந்தும் வேறுபட்டுள்ளது. அவ்வேறுபட்ட உருவைத் தெரிவுசெய்க.

1.




(1) (2) (3)

2.




(1) (2) (3)

3.



உருவில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

4.

1	2	3	4
3	1	2	4
4	5		
2	2		

கட்டங்களுக்குள் இலக்கங்கள் எழுதப்பட்டுள்ள விதத்தினை விளங்கி வெற்றிடமாக உள்ள கட்டங்களில் வரவேண்டிய இலக்கங்கள் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

1	2
4	0

(1)

1	0
4	2


(2)

4	0
1	2

(3)


● 5, 6 ஆகிய வினாக்களில் மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருச்சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவு செய்க.

5.



(1) (2) (3)

6.



(1) (2) (3)

சுட்டெண்: .....

● 7, 8 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சம்பவத்தின ஐந்து சந்தர்ப்பங்கள் ஒழுங்குமாறித் தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு வரிசையைத் தெரிவுசெய்க.

7. A. பந்து வேகமாகச் சென்றது.

B. பந்து மைதானத்தின் எல்லையைக் கடந்தது.

C. நாதன் பந்தை வீசினான்.

D. சூரியா பந்தை அடித்தான்.

E. அமுதனால் பந்தைத் தடுக்க முடியவில்லை.

(1) CDAEB (2) BCDAE (3) ADCBE

8. A. அவள் மரக்கறிப் பையுடன் பாதைக்கு வந்தாள்

B. அந்த முச்சக்கர வண்டியில் ஏறி வீடு சென்றாள்

C. அமுதா சந்தைக்குச் சென்றாள்


D. பாதையில் வந்த முச்சக்கர வண்டியை நிறுத்தினாள்


E. பை நிறைய மரக்கறிகள் வாங்கினாள்.

(1) ECBAD (2) DCBEA (3) CEADB

● 9, 10 ஆகிய வினாக்களின் கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.


9.






(1) (2) (3)

10.





(1) (2) (3)

● 11, 12 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சொல் பிழையாகக் கையாளப்பட்டுள்ளது. அச்சொல்லைத் தெரிவுசெய்க.

11. அடர்ந்த மரங்களால் நிறைந்திருந்த, உயர்ந்த வனத்தினூடாக அந்த நீண்ட ஆறு பாய்ந்து செல்கிறது.

(1) அடர்ந்த (2) உயர்ந்த (3) நீண்ட

12. நறுமணம் வீசிய தோட்டத்துப் பூக்களைச் சுற்றி, தேனீக்கள் இரைந்தபடி பறந்து கொண்டிருந்தன.

(1) வீசிய (2) சுற்றி (3) இரைந்தபடி


13. ரவியை விட, ரகு ஒருவருடம் மூத்தவன். ரகுவைவிட மது இரண்டு வருடங்கள் மூத்தவன். இம்மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 16 வருடங்கள் எனின், ரகுவின் வயது எத்தனை வருடங்கள்?

(1) 3 (2) 4 (3) 5

14. ஒரு வகுப்பில் உள்ள ஐந்து நண்பர்கள் ஒவ்வொருவரும் அவர்களின் பிறந்த தினத்திற்கு ஒருவருக்கொருவர் வாழ்த்து மடல்களை அனுப்பிக் கொள்வர். ஒரு வருடத்தில் இவர்களிடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட வாழ்த்து மடல்களின் எண்ணிக்கை யாது?

(1) 5 (2) 20 (3) 25

● உருவில் ஒவ்வொரு பக்கத்திலும் நிறமை பூசப்பட்ட ஒரு திண்மமரக்குற்றி தரப்பட்டுள்ளது. அதனை, கோடுகள் வழியே வெட்டி பல சிறிய மரக்குற்றிகள் பெறப்பட்டன. அதனைக் கொண்டு 15, 16 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

15. 


வெட்டப்பட்ட பின்னர் கிடைத்த சிறிய சதுரமுகிகள் எத்தனை?

(1) 16 (2) 18 (3) 27

16. கிடைத்த சிறிய சதுர முகிகளில் மூன்று பக்கங்களுக்கு நிற மை பூசப்பட்டவை எத்தனை?

(1) 4 (2) 8 (3) 12

17. கீழுள்ள அடைப்புக்குள் உள்ள ஒவ்வொரு உருவுக்கும் ஒரு முழு எண் பெறுமானம் தரப்பட்டுள்ளது. அப்பெறுமானங்கள் நிரையாகவும் நிரலாகவும் காட்டப்பட்டுள்ளதை அவதானியுங்கள்.



இதன்படி △ + □ + ⊡ இன் பெறுமானம் யாது?

(1) 18

(2) 19

(3) 20

● 18, 19 ஆகிய வினாக்களில் சொற்கள் எழுதப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.

18. கம்பம் பதினாறு → பதிகம்
கணிதம் பலசாலி → பலகணி
தம்பம் மந்திரி → .....


(1) பந்தம் (2) மந்தம் (3) தந்தம்

19. வளம் சரம் திடம் → வசதி
பந்து துறவி மையம் → பதுமை
சந்து கத்தி திறமை → .....

(1) கதிரை (2) திகதி (3) சகதி


● 20, 21 ஆகிய ஒவ்வொரு வினாவின் உருவிலும் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

20.




(1) 12 (2) 31 (3) 35

21.




(1) 3 (2) 5 (3) 7


22. ரோசாப்பூக்கள், பூக்கள் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினைச் சரியாகக் காட்டும் உரு எது?



(1)




(2)



(3)

23.



இந்த உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 12 (3) 14

